Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
MONDAY, FEBRUARY 19, 2024

திங்கட்கிழமை பெப்ரவரி 19, 2024 | ஒளி: 09 கதிர் 195 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# ‘திருக்குறள் AI’



நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியையும், வேகத்தையும் உள்வாங்கி வளர்வதில் தமிழ் மொழி என்றும் தனித்து நிற்கும். அந்த வகையில், ‘திருக்குறள் AI’ பாட் அறிமுகமாகி உள்ளது. இன்றைய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பாய்ச்சலுக்கு ஏற்ப திருக்குறள் ஜெனரேட்டிவ் AI பாட் உருவில் அவதரித்துள்ளது என இதனை குறிப்பிடலாம்.

தொடர்ச்சி P2





# “ஸ்திரமற்ற தன்மையை உருவாக்க வழிவகுக்கும்”

**ஜனாதிபதிக்கு மாநாயக்க தேரர்கள் கடிதம்**

**ஊழல், மோசடிகளை தடுக்க அரசாங்கம் சரியான பொறிமுறையை உருவாக்கியுள்ளது**

*ஷேன் செனவிரத்ன*

தேசிய பாதுகாப்பு மற்றும் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட அரச நிறுவனங்கள் நாட்டின் பொது வளங்கள் என்பதும் தற்போதைய அரசாங்கத்தின் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் குறித்து சமூகத்தில் பலத்த விமர்சனம் இருப்பதும் இரகசியமல்ல என்று சுட்டிக்காட்டியுள்ள அரச நிறுவனங்களை விற்பனை செய்தல். எதிர்காலத்தில் நாட்டில் பாரிய சமூக-பொருளாதார அரசியல் ஸ்திரமற்ற தன்மையை உருவாக்க வழிவகுக்கும் என்று மூன்று பௌத்த பீடங்களைச் சேர்ந்த மாநாயக்க தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் கடிதம் அனுப்பிவைத்துள்ளனர்.

தொடர்ச்சி P2



# ‘அஸ்வெசும’ நிரப்ப 300 ரூபாய் அறவீடு

*செ.தி.பெருமாள்*

அஸ்வெசும நலன்புரி சம்பந்தமான இரண்டாம் கட்ட விண்ணப்பம் கோரல் கடந்த 15ஆம் திகதி முதல் நாடு முழுவதும் முன்னெடுக்கப்படுகின்றது.

குறித்த விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு பொது மக்களிடமிருந்து, தலா 300 ரூபாய் அறவிடப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன

அஸ்வெசும விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் அதிகாரம்கொண்ட அதிகாரிகள் தாங்கள் என்றும் சுயமாக நிரப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது எனக் கூறியே ஒருசிலர், மக்களை இவ்வாறு ஏமாற்றிவருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. மஸ்கெலியா, சாமிமலை பகுதியில் இவ்வாறான சம்பவங்கள் கூடுதலான இடம்பெறுக்கின்றன.

தொடர்ச்சி P2

# கட்புலனற்றோர் வாக்களிக்க விசேட வசதிகளை



கட்புலனற்றோர் வாக்களிக்க விசேட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேல்தல்களின்போது, வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் உதவியுடனேயே தற்போது அவர்கள் வாக்களித்து வருவதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# ஈரான் வெளிவிவகார அமைச்சர் வருகின்றார்



வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் அழைப்பின் பேரில், ஈரான் இஸ்லாமிய குடியரசின் வெளிவிவகார அமைச்சர் டாக்டர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹியன் 2024 பெப்ரவரி 19-21 வரை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது, ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்யும் அமைச்சர் மற்றும் அவரது குழுவினர் வெளிவிவகார அமைச்சில் அமைச்சர் அலி சப்ரியுடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளனர்.

தொடர்ச்சி P2




# “நிகழ்நிலை காப்பு சட்டத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்வோம்”

பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்தி வைக்கும் முன்னைய நாள் நிகழ்நிலை காப்பு சட்டத்தை முன்வைத்தனர். உயர்நீதிமன்றத்தால் பிரேரிக்கப்பட்ட எந்தவொரு திருத்தங்களும் அதில் உள்ளடக்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன, இந்த நிகழ்நிலை காப்பு சட்டத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்வோம். அத்துடன், இச்சட்டத்தை நீக்கி புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வாருமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள்

# கறுப்பு கொடிகளை கட்டி போராட்டம்

*ரொசேரியன் லெம்பட்*

எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கைது செய்யப்பட்ட மீன்பிடி விசைப் படகின் ஓட்டுனருக்கு ஆறு மாத சிறைத் தண்டனை மற்றும் இரண்டாவது முறையாகக் கைது செய்யப்பட்ட மீனவருக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதித்தமையை கண்டித்து ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மீனவர்கள் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதமாக ராமேஸ்வரம் மீன் பிடித்து துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சுமார் 800-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் ஞாயிற்றுக்கிழமை (18) காலை கறுப்பு கொடிகளை கட்டி போராட்டம் நடத்தினர்.

தொடர்ச்சி P2



# கேரட்டின் விலை குறைந்தது

*பி.கேதீஸ்*

நுவரெலியாவில் 2,000 ரூபாய்கும் மேல், விற்பனைச் செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் கேரட்டின் விலை 360 ரூபாவாக ஞாயிற்றுக்கிழமை (18) குறைந்துள்ளது.

நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ கிராம் கேரட்டின் விலை 360 ரூபாவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

மரக்கறி வகைகளின் விலை அதிகரிப்பு காரணமாக நுகர்வோர் இன்னும் சந்தைக்கு திரும்பாத காரணத்தினால் சந்தையில் கேரட்டின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

தொடர்ச்சி P2

வலிகாமம் வடக்கில்

# 7 ஆலயங்களில் வழிபட அனுமதி

**உயர் பாதுகாப்பு வலயத்தினுள் செல்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளை இராணுவத்தினரே மேற்கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது**

*எம்.றொசாந்த்*



யாழ்ப்பாணம் - வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள 21 ஆலயங்களில் 07 ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்த இராணுவத்தினர் கட்டுப்பாடுகளுடன் அனுமதி வழங்கியுள்ளனர்.

பலாலி இராஜஇராஜேஸ்வரி அம்மன் ஆலயம் உள்ளிட்ட 07 ஆலயங்களுக்குச் சென்று வழிபடவே இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர்.

ஆலய வழிபாடுகளுக்குச் செல்ல விரும்புவோர், தமது பெயர், விலாசம், அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் என்பவற்றை ஆலய நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்குமாறும், நிர்வாகத்தினர் விபரங்களை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் என்பவற்றில் கையளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் செல்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளை இராணுவத்தினரே மேற்கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# அமெரிக்க பிரிதிநிதிகள் வந்தடைந்தனர்

நிகழ்நிலை காப்பு சட்டம் உள்ளிட்ட சட்டங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக அமெரிக்க செனட் சபையின் வெளியுறவு தொடர்புகள் குழுவின் சிரேஷ்ட தொழில்சார் பணிக்குழாமின் பிரதிநிதிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் நிலைமைகள் தொடர்பில் ஆழமான தெளிவைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த பிரதிநிதிகள் குழு நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக, அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது X பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பிரதிநிதிகள், பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பில் ஆராயவும், நிகழ்நிலை காப்பு சட்டம் உள்ளிட்ட அண்மைய சட்டங்களுடன் தொடர்புடைய சிக்கல்கள் குறித்து கலந்துரையாடவும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரைச் சந்திக்கவுள்ளதாக அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# “ஸ்திரமற்ற தன்மையை உருவாக்க வழிவகுக்கும்”







மல்வத்து மாநாயக்க, அஸ்கிரிய மாநாயக்க, அமரபுர, சங்க சபையின் தலைவர் உள்ளிட்ட மாநாயக்க தேரர்கள், ஞாயிற்றுக்கிழமை (18) அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசு நிறுவனங்கள் மற்றும் அந்த செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மை இல்லாமை மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள், பொது நலன், தேசிய மற்றும் சமூகப் பாதுகாப்பு குறித்து கடுமையான நிச்சயமற்ற நிலை நிலவுவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இலங்கையிலுள்ள பெரும்பான்மையான தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பொது நிறுவனங்களை மறுசீரமைக்கும் செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு தமது அதிருப்தியை வெளிப்படுத்தியதை நாம் அவதானித்துள்ளோம்.

கடந்த 76 ஆண்டுகளில், தேசிய கொள்கையின்றி தவறான பொருளாதார உத்திகளின் அடிப்படையில் பல்வேறு அரசாங்கங்களின் தன்னிச்சையான சந்தர்ப்பவாத நடவடிக்கைகளினால் நாட்டில் பல்வேறு தேசிய அரசியல், சமூக மற்றும் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டன.

அரசியல் தலையீடு, ஆட்சேர்ப்பு, பொது வளங்களை துஷ்பிரயோகம், ஊழல் மற்றும் மோசடிகளை தடுக்க அரசாங்கம் சரியான பொறிமுறையை உருவாக்கியுள்ளது, சரியான மேற்பார்வையின் மூலம், மக்கள் நலனுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்பது நாட்டின் பொது கருத்து. அது வேண்டும்

ஆனால் அரசு வணிகங்களை தனியார்மயமாக்குவதன் மூலம் இந்த நிறுவனங்களை எந்த அளவிற்கு அரசால் கட்டுப்படுத்த முடியும்? நாட்டில் இயற்கைப் பேரிடர் அல்லது சமூகப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டால் இதுபோன்ற தனியார்மயமாக்கப்பட்ட நிறுவனங்களின் நடத்தை எப்படி இருக்கும்? இப்பிரச்னைகளால் பொதுமக்கள் கடும் நெருக்கடிக்கு ஆளாகினர்.

மக்கள் நலன், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்,

> **ஜனாதிபதி இந்த விடயங்கள் அனைத்திலும் உடனடி கவனம் செலுத்தி, தேசியப் பாதுகாப்பு தொடர்பில் சந்தேகங்களை ஏற்படுத்தும் வகையிலான தீர்மானங்களை எடுக்காமல், உயிர்களை ஆபத்தில் ஆழ்த்தும் வகையில், பாதுகாப்பான நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய அரச நிறுவனங்களை முறையான மறுசீரமைப்புச் செயற்பாட்டிற்குச் செல்ல வேண்டும். நாட்டின் எதிர்காலம், பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குமாறு தெரிவிக்கிறோம்**

அத்தியாவசிய சேவைகளை சீராகப் பராமரித்தல், மக்களைப் பாதுகாத்தல் என மக்களின் நலனுக்காகப் பாடுபடுவது தலைவரின் முழுமையான கடமையும் பொறுப்பும் ஆகும் திருடர்கள் மற்றும் எதிரிகள் மற்றும் பயங்கரவாதம் போன்றவற்றின் ஆபத்துகளிலிருந்து காப்பாற்றவேண்டும்.

இலங்கையின் பொருளாதாரம் மற்றும் தேசிய பாதுகாப்பு மற்றும் அரச வங்கி முறைமைக்கு பெரும் பங்களிப்பை வழங்கும் வர்த்தக இலாபத்திற்காக மாத்திரம் செயற்படும் வெளிநாட்டு நிறுவனங்களுக்குப் பொருளாதார சக்தியாக விளங்கும் ஸ்ரீலங்கா டெலிகொம், மின்சார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்களை விற்பனை செய்தல். எதிர்காலத்தில் நாட்டில் பாரிய சமூக-பொருளாதார அரசியல் ஸ்திரமற்ற தன்மையை உருவாக்க வழிவகுக்கும்.

மேலும், நாட்டின் சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி, மக்களின் வாழ்க்கையில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்த முடிந்துள்ளது.

எனவே, ஜனாதிபதி இந்த விடயங்கள் அனைத்திலும் உடனடி கவனம் செலுத்தி, தேசியப் பாதுகாப்பு தொடர்பில் சந்தேகங்களை ஏற்படுத்தும் வகையிலான தீர்மானங்களை எடுக்காமல், உயிர்களை ஆபத்தில் ஆழ்த்தும் வகையில், பாதுகாப்பான நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய அரச நிறுவனங்களை முறையான மறுசீரமைப்புச் செயற்பாட்டிற்குச் செல்ல வேண்டும். நாட்டின் எதிர்காலம், பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குமாறு இதன் மூலம் உங்களுக்குத் தெரிவிக்கிறோம்.

# ‘திருக்குறள் AI’

அந்த வகையில், திருக்குறள் AI மூலம் வள்ளுவரின் 1,330 குறளையும் பயனர்கள் பெறலாம். அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என வள்ளுவர் எழுதிய முப்பாலிலும் உள்ள 133 அதிகாரங்களில் உள்ள அனைத்து குறள் மற்றும் அதற்கான பொருள் விளக்கத்தை இதில் உள்ள குறள் பட்டியல் மூலம் பயனர்கள் பெறலாம். முன்னாள் முதல்வர் கருணாநிதி, பரிமேலழகர், சாலமன் பாப்பையா மற்றும் மு.வரதராசனார் ஆகியோரது பொருள் விளக்கம் ஒவ்வொரு குறளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.



இதுமட்டுமல்லாது ஏதேனும் ஒரு சொல்லின் அடிப்படையில் உரையாடல் வடிவில் இந்த AI பாட் உடன் பயனர்கள் வினவ முடியும். உதாரணமாக ‘அறம்’ என இதில் பயனர்கள் உள்ளிட்டால், அதனை இந்த பாட் உள்வாங்கிக் கொண்டு அது சார்ந்த அனைத்து குறள்களும் பட்டியலிடப்படுகிறது. இதன் வடிவமைப்பு மற்றும் பயனர் பயன்பாடும் எளிதான வகையில் உள்ளது. தமிழில் தகவல்கள் கிடைக்கிறது.

# ‘அஸ்வெசும’ நிரப்ப 300 ரூபாய் அறவீடு

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் மஸ்கெலியா நகரில் உள்ள மனித நேயம் உள்ள தொடர்பாடல் நிலையங்களில் 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது அதனைப் பெற்று தமக்குத் தெரிந்த மொழியில் பூர்த்தி செய்து தமது பிரிவுக்குப் பொறுப்பான கிராம சேவை அதிகாரிகளிடம் சுயமாகக் கையளித்தாலே போதுமான விடயமாகும்.

மக்களை ஏமாற்றுவோரை இனங்கண்டு நடவடிக்கை எடுக்கப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கிறனர். அத்துடன், மார்ச் 15ஆம் திகதியுடன் இரண்டாம் கட்டம் நிறைவடைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# கறுப்பு கொடிகளை கட்டி போராட்டம்

எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கைது செய்யப்பட்ட மூன்று தமிழக மீனவர்களுக்குச் சிறைத் தண்டனை விதித்து இலங்கை நீதிமன்ற தீர்ப்பளித்ததைக் கண்டித்து நீதிமன்ற தீர்ப்பை உடனடியாக ரத்து செய்ய வலியுறுத்தியும் ராமேஸ்வரம் மீனவர்கள் இந்த போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இந்நிலையில், கச்சத்தீவு திருவிழாவைப் புறக்கணிப்பதுடன் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடப் போவதாகச் சனிக்கிழமை (17) நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் விசைப்படகு மீனவர்கள் முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கட்புலனற்றோர் வாக்களிக்க விசேட வசதிகளை



இந்த திட்டத்தின் கீழ் Braille முறையில் அச்சிடப்பட்ட கட்சிகளின் பெயர்கள் மற்றும் வேட்பாளர்களின் பெயர்கள் அடங்கிய காகிதம் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான விசேட மாதிரி வேலைத்திட்டம் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் வெள்ளிக்கிழமை (16) இடம்பெற்றது.

நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பார்வையற்றோர் மற்றும் பார்வையற்ற சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு இப்புதிய வேலைத்திட்டம் தொடர்பில் அறிவிக்கப்பட்டு நடைமுறை சோதனையும் நடத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் தேர்தலில் கட்புலனற்றோர், தனித்து வாக்களிக்கும் உரிமையை அனுபவிக்க முடியுமெனத் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

# “நிகழ்நிலை காப்பு சட்டத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்வோம்”

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில், ஞாயிற்றுக்கிழமை (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் ‘யுக்திய’ தேடுதல் நடவடிக்கையின் நோக்கம் தெளிவாக இருக்க வேண்டும் என்பதோடு முறைமையும் சரியாக அமைய வேண்டும்.சட்டம் சரியாக நடைமுறைப்படுத்த வேண்டும் அத்துடன் நீதிமன்றத்தின் ஊடாகவே இது இடம்பெற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நிகழ்நிலை காப்புச் சட்டமூலம், நீதிமன்றத்திற்குச் சென்றது. அதிலுள்ள 57 ஷரத்துகளில் 31 ஷரத்துகள் திருத்தப்பட வேண்டும். இல்லையேல் அது அரசியலமைப்பிற்கு முரணாகும் என வியாக்கியானம் செய்திருந்தது. ஒரு சட்டமூலத்தை சட்டமாக்கும் போது, பாராளுமன்ற நடைமுறையிலும் பலர் பல திருத்தங்களை முன்வைப்பர். இந்த செயல்முறையும் இது பின்பற்றப்படவில்லை என்றார்.

இச்சட்டம் கொண்டு வரப்பட்ட முறைமை தொடர்பில் பிரச்சினை எழுகிறது. மக்களின் சிவில் சமூகத்தின் கருத்துச் சுதந்திரம் பாரியளவில் மட்டுப்படுத்தப்படுகிறது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை (ICCPR) சட்டத்தை மீறுகிறது. இதன்

> **சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கான முறைமை சரியாகப் பின்பற்றப்படவில்லை. அரசியலமைப்பின் 12/1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட வழிமுறைகள் பின்பற்றப்படவில்லை. அரசியலமைப்பின் 84/1,84/2 ஷரத்துக்கள் கருத்திற் கொள்ளப்படவில்லை. இளைஞர் விவகார அமைச்சின் துறைசார் மேற்பார்வை குழுவிற்கு இச்சட்டமூலம் அனுப்பப்பட்டது**

மூலம் இது குற்றவியல் குற்றமாகக் கருதப்படுகிறது. டிஜிட்டல் வர்த்தகத்திற்கும் இது பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்றார்.

சட்ட மூலத்தை சபாநாயகரும் சான்றுரைப்படுத்தினார். எனினும்,நாம் இதை ஏற்றுக் கொள்ள மாட்டோம். சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கான முறைமை சரியாகப் பின்பற்றப்படவில்லை. அரசியலமைப்பின் 12/1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட வழிமுறைகள் பின்பற்றப்படவில்லை. அரசியலமைப்பின் 84/1,84/2 ஷரத்துக்கள் கருத்திற் கொள்ளப்படவில்லை. இளைஞர் விவகார அமைச்சின் துறைசார் மேற்பார்வை குழுவிற்கு இச்சட்டமூலம் அனுப்பப்பட்டது. துறைசார் மேற்பார்வை குழு இது தொடர்பான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். இந்த அறிக்கையை துறைசார் மேற்பார்வை குழு சமர்ப்பிக்கவில்லை. இதை சட்டமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்த அவர், அரசியலமைப்பிற்கு முரணாகவே இது கொண்டு வரப்பட்டுள்ளது என்றார்.

நாம் வங்குரோத்தானவர்கள் என ஒப்புக்கொண்டு சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கடன் பெற்ற தரப்புகளுடன் நாம் உடன்பாடுகளுக்கு வர வேண்டும். சர்வதேச பிணை முறி முதலீட்டாளர்களுடன் இது வரை எந்தவித உடன்பாடுகளும் எட்டப்படவில்லை. இவர்களிடம் இருந்து பெறப்பட்ட கடன் 300 பில்லியனுக்கும் அதிகமாகும். ஒரு வருடம் கடந்து விட்டது அரசாங்கம் என்ன கதை கூறினாலும். கடன் செலுத்த வேண்டிய தரப்பினருடன் இன்னும் உடன்பாடுகளை எட்ட முடியாது போயுள்ளது என்றார்.

இதன் விளைவு, 2023 மார்ச் நுகர்வோர் நம்பிக்கை சுட்டியின் ஆய்வறிக்கையின் குறி காட்டிகளுக்கு அமையச் சந்தையில் நுகர்வோர் நம்பிக்கை குறைந்தே வருவதாகச் சுட்டிக்காட்டுகிறது. டிசெம்பர் முதல் ஜனவரி மாதங்களில் இது மேலும் 5% ஆல் குறைந்துள்ளது. இது தோல்வியையே சுட்டிக்காட்டுகிறது. நம்பிக்கை குறைந்துள்ளது. சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப் படாமையினால் இவை நடக்கின்றன என்றார்.

# ஈரான் வெளிவிவகார அமைச்சர் வருகின்றார்



ஒகஸ்ட் 2023 இல், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தெஹ்ரான் விஜயத்தின்போது, வெளியுறவு அம்மைச்சர் டாக்டர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹியனுடன் இருதரப்பு விவாதங்களை நடத்தினார்.

டாக்டர் அமீர் அப்துல்லாஹியனுடன் ஜனாதிபதி அலுவலகம், வெளியுறவு அமைச்சகம், எரிசக்தி அமைச்சகம் மற்றும் ஈரானின் பிற தொடர்புடைய அமைச்சகங்களின் மூத்த அதிகாரிகளும் வருவார்கள்.

# கினிகத்தேன விபத்தில் 10 யாத்ரீகர்கள் படுகாயம்




சிவனொளிபாதமலைக்கு யாத்ரீகர்கள் குழுவை ஏற்றிச் சென்ற வேனும் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதியதில் வான் மற்றும் பஸ்ஸில் பயணித்த 10 யாத்ரீகர்கள் காயமடைந்து கினிகத்தேனை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் -கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேன மில்லகஹமுல பிரதேசத்தில் இந்த விபத்து ஞாயிற்றுக்கிழமை (18) பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கம்பஹாவிலிருந்து சிவனொளிபாதமலைக்கு வானில் வந்த யாத்ரீகர்கள் குழுவொன்று திரும்பிக்கொண்டிருந்த போது, மாத்தறையிலிருந்து யாத்திரீகர்கள் குழுவை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று மோதியுள்ளது.

# கேரட்டின் விலை குறைந்தது



நுவரெலியா மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் நிலவும் சிறந்த காலநிலை காரணமாக மலையகத்தில் அனைத்து மரக்கறி வகைகளின் விலைகள் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மரக்கட்டையில் மோதி ஒருவர் பலி

சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு, தேவிபுரம் பகுதியில் சனிக்கிழமை (17) இரவு 7.00 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தேவிபுரம் பகுதியினை சேர்ந்த 55 வயதுடைய சி.சிவபாஸ்கரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பில் பனை, தென்னை கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினரான குறித்த நபர் தொழிலை நிறைவு செய்த பின்னகர், தனது உந்துருளியில் வீடு திரும்பும் வழியில் தேவிபுரம் பகுதி வீதியில் குறுக்கே விழுந்து, அங்கு கிடந்த மரக்கட்டையில் மோதியே இவ்விபத்து சம்பவித்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கச்சத்தீவு திருவிழாவை புறக்கணிக்க தீர்மானம்



கச்சத்தீவு திருவிழாவை புறக்கணிக்க தமிழக மீனவர்கள் தீர்மானித்துள்ளனர்.

தமிழக மீனவர்களை இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக கைது செய்கின்றமையை கண்டித்து மீனவர்களால்,சனிக்கிழமை (17) நடத்தப்பட்ட அவசர ஆலோசனைக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்படும் இந்திய மீனவர்களுக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்படுகின்றமை மற்றும் படகுகள் அரசுடைமையாக்கப்படுகின்றமை என்பவற்றை கண்டித்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் ராமேஷ்வரத்தில் 200-க்கும் மேற்பட்ட மீனவர்கள் அவசர ஆலோசனைக் கூட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலவச ஆயுர்வேத சிகிச்சை முகாம்

எம்.யூ.எம்.சனூன்



புத்தளம் - மதுரங்குளி நல்லாந்தழுவை ஆயுர்வேத மத்திய மருந்தகத்தில் இலவச ஆயுர்வேத சிகிச்சை முகாம் ஆயுர்வேத மத்திய மருந்தகத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

மத்திய மருந்தகத்தின் வைத்தியர் றிழ்வானா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வினை முன்னாள் வட மேல் மாகாண சபை உறுப்பினர் ஏ.எச்.எம்.றியாஸ் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்துள்ளார்.

இலவச சிகிச்சை முகாமில் நீரிழிவு, இரத்த அழுத்த பரிசோதனை, நிறை பார்த்தல், ஹிஜாமா (Cupping), அக்குபஞ்சர் சிகிச்சை, தோல் நோய், குழந்தை நோய்கள் போன்றவற்றுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த வைத்திய முகாமில் சுமார் 200க்கு மேற்பட்ட நோயாளர்கள் கலந்து கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த விசேட கலந்துரையாடல்

அதிரன்



மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் முதலீட்டாளர்களுடனான விசேட கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் வெள்ளிக்கிழமை (16) இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வின், மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்து உள்ளூர் மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவும் கடற்கரையை அண்மித்த பகுதிகளில் சுற்றுலா விடுதிகள், உணவகங்கள் போன்றவற்றை அமைத்தல் மற்றும் முகத்துவாரத்தில் அமைந்துள்ள வெளிச்ச கோபுரத்தை புனரமைப்பு செய்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் தவிசாளர் பி.மதனவாசன், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஶ்ரீகாந்த், 243ஆம் படைப்பிரின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சன்டிம குமாரசிங்க, மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் எந்திரி. சிவலிங்கம், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதிஸ்குமார், துறைசார் நிபுணர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

# சிகிச்சை பெற்று வந்த வர்த்தகர் மரணம்



எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் நோயாளர் காவு வண்டியுடன் விபத்துக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த வர்த்தகர் சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை (17) உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி-அல்வாய் பகுதியை சேர்ந்த சண்முகதாஸ் தர்மதாஸ் (வயது 54) என்ற வர்த்தகரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்.நகர் பகுதியில் வர்த்தக நிலையம் நடாத்தி வரும் இவர், வர்த்த நிலையத்தை மூடி விட்டு, மோட்டார் சைக்கிளில் தனது வீட்டை நோக்கி பயணித்துக்கொண்டிருந்தபோது, ஆனைப்பந்தி சந்திக்கு அருகில் வைத்து நோயாளர் காவு வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளனதாக தெரியவந்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த குறித்த நபர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிசிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# “நாட்டின் அபிவிருத்தியை மீண்டும் ஆரம்பித்து வைத்துள்ளார் ஜனாதிபதி”



கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக மூன்று வருடங்களாக தடைப்பட்டிருந்த நாட்டின் அபிவிருத்தியை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மீண்டும் ஆரம்பித்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அதன் இணைத் தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கோட்டேகொட மற்றும் மத்திய மாகாண ஆளுநர் லலித் யு.கமகே தலைமையில் வெள்ளிக்கிழமை (16) நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜூலை 31ஆம் திகதிக்குள் நிறைவேற்றக்கூடிய வேலைத்திட்டங்களே முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, நாட்டின் மலைப் பிரதேசங்களில் வாழும் மக்களின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக மலைப் பத்தாண்டு எனப்படும் பத்தாண்டு கால பல்நோக்கு கிராமப்புற மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில், 10 முக்கிய அபிவிருத்திப் பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதாவது வாழ்வாதாரம், சந்தை அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாடு, கல்வி, குடிநீர் வசதி, விவசாயம் மற்றும் சிறு நீர்ப்பாசனம், மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்கவை, தொலைபேசி மற்றும் இணையம், சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் முகாமைத்துவம் மற்றும் வீட்டு வசதிகளை மேம்படுத்துதல். மலையக பிரதேசங்களில் வாழும் பெருந்தோட்ட சமூகங்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு விரைவான மற்றும் திட்டமிடப்பட்ட அணுகுமுறையை மேற்கொள்வதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் என்றார்.

# சேலை அணியாமல் சென்ற ஆசிரியை விரட்டியடிப்பு



சேலை அணியாமல் சென்ற ஆசிரியை விரட்டியடிக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட ஆசிரியை கடுகண்ணாவை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கிராகம ஆசிரியர் கலாசாலையின் மத்திய நிலையத்துக்கு ஞாயிற்றுக்கிழமை(18) சென்றுள்ள ஆசிரியையே இவ்வாறு விரட்டியடிக்கப்பட்டுள்ளார்.

ஆசிரியர்களின் சேவை உயர்வுகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட திறன் வரம்புகளை முழுமைப்படுத்துவதற்கே அந்த ஆசிரியை சென்றுள்ளனார். அப்போது அங்கிருந்த மத்திய நிலையத்தின் முகாமையாளர் அந்த சேலை அணியாமல் வந்திருந்த ஆசிரியையை அங்கிருந்து விட்டிவிட்டார். இது தொடர்பிலேயே அந்த ஆசிரியை முறைப்பாடு செய்துள்ளார்.

## சிறு விளம்பரங்கள்

இரத்தினபுரி வீதியில், எஹலியகொட நகருக்கு மிகவும் அருகில், பார்க்கும் தூரத்தில் 53 பேர்ச் காணி, முழுமைப்படுத்தப்படாத வீட்டுடன் குடிபுகுவதற்கு உகந்தது. 0771-004007 தல்கஸ்வத்த.

***

பிலியந்தலை தேவானந்த பாதைக்கு முகப்புறமாக, 8 பேர்ச், போகுந்தரவுக்கு பிரதான வீதிக்கு ஒன்றரை கிலோ மீற்றலில், தும்புபோவில 13 பேர்ச் காணி, (விலங்கு பண்ணைக்கு) உகந்தது. 0771-004007 தல்கஸ்வத்த.

***

மீரிகம-மாலதெனிய 5ஆம் மைல் கல்லுக்கு அண்மையில், 13 பேர்ச் உடன், வசிப்பதற்கு வீடு குறைந்த விலையில். தொடர்பு கொள்ளவும் 0771-004007 தல்கஸ்வத்த.


உயிர்காக்க உதவுங்கள்




நன்கொடை அளித்திட:
SMS: Suwa <இடைவெளி> <நன்கொடை தொகை>
என type செய்து 366 இற்கு அனுப்புங்கள்
அல்லது www.karuna.lk ஐ பார்வையிடுங்கள்

Karuna.lk The Heart of Sri Lanka | Supported by Dialog Foundation | 1990

ஊடக பங்காளர்கள்

Lankadeepa | Daily Mirror | தமிழ்Mirror | The Sunday Times | Daily FT | Hiru TV | Hiru FM | Dialog Television

twitter.com/dialoglk facebook.com/dialog.lk
• நிபந்தனைகளுக்கு உட்பட்டது

சுவசரியவின் உத்தியோகபூர்வ இணைப்பு வழங்குனர்
Dialog
an axiata company www.dialog.lk

# பெற்றோர்களே இன்னுமின்னும் விழிப்பாகவே இருக்கவேண்டும்

யாரிடமாவது பேச்சை கொடுத்தால், வீட்டில் இருக்கும் அத்தனை பேரும் வேலைக்கு போனால் போதாது, வீட்டில் இருக்கும் நாயும் வேலைக்குப் போகவேண்டுமெனக் கூறுவதைக் கேள்விப்பட்டிருப்போம். பொருளாதார நிலைமை அந்தளவுக்கு மோசமாகிக் கொண்டிருக்கின்றது.

வர்த்தகத்தில் ஈடுபடும் பலரும், அதிக விலைக்கு விற்றல், தரமற்ற பொருட்களை விற்றல், கலப்படம், பதுக்கி வைத்திருந்து விற்றல், இப்படியெல்லாம் அடுக்கிக்கொண்டே போகலாம்.

இவற்றுக்கிடையில், நாட்டில் கொலை, கொள்ளை உள்ளிட்ட சம்பவங்களுக்குக் குறைவே இல்லை எனலாம்.

மேலும், போதைப்பொருள் பயன்படுத்துவோரின் அட்டகாசத்துக்குக் குறைவே இல்லை. 'யுக்திய' நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ள நிலையில், போதைப்பொருள் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை குறையவில்லை. வகைப்படுத்தப்பட்டிருக்கும் போதைப்பொருளுகளுக்கு அப்பால், பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் வர்த்தகம் மிக சூட்சுமமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒருவகையான ஸ்டிக்கர், டொபி போன்ற இனிப்பு பண்டம், பேனாக்கள் ஆகியவற்றின் ஊடாகவே போதைப்பொருள் பாடசாலை மாணவர்கள் மத்தியில் கொண்டுசெல்லப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. பாடசாலைகளுக்கு தங்களுடைய பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர், மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும்.

தலைமன்னார் வடக்கு பகுதியில் 10 வயதான சிறுமியொருவர் கடத்தப்பட்டு, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், படுகொலைச் செய்யப்பட்டுள்ளார். அந்தக் குற்றச்செயலைப் புரிந்தவர், அச்சிறுமியின் பாட்டியிடம் சாப்பாடு வாங்கி சாப்பிடுபவர் என்றும் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. ஆக, போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள், எவ்வாறான குற்றங்களையும் புரியக் கூடியவர்கள் என்பதை நினைவில் கொள்க.

இதனிடையே இப்பாகமுவ கல்வி வலயத்திலுள்ள ஆரம்ப பாடசாலை மாணவர்கள் நால்வர், மரமொற்றுக்கு கீழ், விழுந்துகிடந்த நிலையில் மீட்கப்பட்டு, குருணாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில், ஒருவரின் நிலைமை ஆபத்தானது என்றும் நால்வரும் போதைப்பொருள் பாவித்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

அந்த நால்வரில் ஒருவருடைய தந்தை போதைப்பொருள் பயன்படுத்துபவர் என்பது விசாரணைகளின் மூலமாகக் கண்டறியப்பட்டுள்ளது. பாடசாலை பருவத்தில் எதனையும் சோதித்துப் பார்க்கும் ஆர்வம் மாணவர்களிடத்தில் இருக்கும், இதன் காரணமாக, போதைப்பொருள் என்று தெரியாமல் அந்த மாணவர்கள் பயன்படுத்தி இருக்கக்கூடும்.

பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பும் பெற்றோர்கள், யார், எதனைக் கொடுத்தாலும் வாங்கவோ, வாங்கி உண்ணவோ, நுகரவோ வேண்டாமென அறிவுறுத்த வேண்டும். அதேபோல, வித்தியாசமான, தங்களுக்கு பரீட்சயமில்லாத பொருட்களை, கண்டால் எடுக்கவே வேண்டாமென கூறவேண்டும்.

அத்துடன், தங்களுடைய பிள்ளைகளின் நண்பர்கள் யார், அந்த நண்பர்களின் வட்டம் எப்படியாவது என்பதை அறிந்துவைத்துக்கொள்ளவேண்டும். தங்களுடைய பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டுமாயின், விழிப்பாக இருப்பதே சிறந்தது.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

துன்பங்களை, இன்பங்களுக்குள் திணித்தலாகாது. சந்தோஷமான தருணங்களில் கூட, துன்பங்களை நினைத்து உருகிக்கொண்டிருக்கும் அல்லது புலம்பிக்கொண்டிருக்கும் பிரகிருதிகள் ஏராளம் பேர் இருக்கிறார்கள்.

துன்பங்களை, சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது எனப் பலர், தங்களின் மதிநுட்பத்தைப் பயன்படுத்துவார்கள். அல்லது, தங்களுக்கு நம்பிக்கையானவர்களுடன் ஆலோசனை செய்வார்கள். ஆனால், இத்தகைய அணுகுமுறைகளை விட்டுவிட்டு, சிலர் தமது மனம் போன போக்கின்படி, நடந்துகொள்வார்கள். இது அழிவின் பாதைக்கே இட்டுச்செல்லும். எந்தவொரு மனிதனின் மனநிலையும் எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. அன்றாடம், ஏதோ விதமாகச் சின்ன சின்னப் பிரச்சினைகள் வரலாம், அவை எவற்றையும் ஊதிப்பெருப்பிப்பது அறிவீனம்.

சுலபமாகக் கிடைக்கும், உழைப்பற்ற வருமானங்கள் நிரந்தரமானவை அல்ல, வாழ்க்கையின் உச்சத்தைத் தொட்டவர்கள், மேலான கஸ்டங்களை அனுபவித்து, அதில் இருந்து மீண்டவர்களாகவே இருப்பார்கள்.

குறிப்பிட்டவர்களுக்கு என சோதனை வருவதில்லை. சோதனைகளுக்குள் மூழ்குவது வாழ்க்கை அல்ல; எல்லாமே புதியன அல்ல; புத்திசாலிகள், அறிவுத்திறன் உள்ளவர்கள், எதுநடந்தாலும் தொடர்ந்து, சிந்தித்து, சரியாகச் செயற்பட்டு, தங்கள் வழியில் செல்கிறார்கள். துணிவுதான் மனிதனை உருவாக்குகின்றது.

நன்றி-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தமிழர்களது இனப்பிரச்சினையில் ஜே.வி.பி.

**லக்ஸ்மன்**

இந்திய - இலங்கை உடன்படிக்கையின் மூலம் 1987 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த வடக்கு- கிழக்கு மாகாணங்களின் இணைப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தற்போது தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் செயற்படும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) வழக்குத் தொடர்ந்ததன் அடிப்படையில் 2006 ஒக்ரோபர் 10ஆம் திகதி வடகிழக்கு இணைப்பு செல்லாது மற்றும் சட்டவிரோதமானது என்ற அறிவித்தல் வந்தது. இது ஜே.வி.பி யின் தமிழர்கள் விடயம் தொடர்பான நிலைப்பாட்டை எடுத்துக்காட்டும். ஆனால், இன்றைய காலங்களில் தமிழர்களது விடயங்களில் அக்கறையானவர்களாக தம்மைக் காண்பிக்க முயற்சிக்கிறார்கள்.

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்த ஜே.வி.பியின் தாபகத் தலைவர் ரோஹந விஜயவீர தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தீவிரமாக எதிர்த்தார். அவர் இலங்கையின் ஆட்சியை ஆயுத முனையில் பிடிக்க இரண்டு முறை முயற்சித்தார். 1971இல் அவரது இயக்கம் மேற்கொண்ட ஆயுதப் புரட்சி தோல்வியானது. மீண்டும் இலங்கை அரசுக்கு எதிராக 1987-1989 காலப் பகுதியிலும் முயற்சி பயனற்றுப் போனது உலப்பன தேயிலைத் தோட்டத்தில் ஒளிந்திருந்த விஜயவீராவை, இராணுவம் 1989 ஒக்ரோபர் 3ஆம் திகதி கைது செய்தது. நவம்பருடன் அவர் கொல்லப்பட்டார். அதன் பின்னர் அவர்கள் அரசியல் இயக்கமாகச் செயற்பட்டு வருகிறார்கள். குறிப்பிட்டளவான ஆசனங்களைப் பாராளுமன்றத்தில் பெறும் கட்சியாக அது வளர்ந்தது.

ஆனால், கடந்த சில தேர்தல்களிலும் தேசிய அரசியலிலும் சரி, தமிழர்களது விடயங்களிலும் சரி கணக்கிலெடுக்கப்படாத நிலையை எட்டியிருந்த ஜே.வி.பி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவை விரட்டியடித்த அரகலயவுடன் சற்று மேம்படுத்திக் கொண்டதுடன், இப்போது இந்தியா அழைத்துப் பேசும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது. இது ஒரு முன்னேற்றம்தான். அதே நேரத்தில் மக்களிடமும் ஆதரவைப் பெருக்கிக் கொண்டது என்ற ஒரு மாயையும் தன்வசப்படுத்திக் கொண்டுள்ளது என்பது உண்மை.

அரசியலிலும் பன்னாட்டு உறவுகளிலும் நிரந்தர நண்பர்களோ, நிரந்தர எதிரிகளோ இல்லை என்பது பல்வேறு நிகழ்வுகளின் மூலம் நிரூபிக்கப்படலாம். அதற்கு ஜே.வி.பியும் விலக்களிப்புக்கு உட்பட்டதல்ல. ஜே.வி.பி யின் இந்திய விஜயம் அந்நாட்டின் இராட்சிய நலன்கள் சம்பந்தப்பட்டது மாத்திரமல்ல இலங்கைத் தமிழர்களது விவகாரத்திலும் முக்கியமானது. ஆனாலும், இந்தியா மேற்கொண்ட ஜே.வி.பி தொடர்பான இராஜதந்திர நகர்வு அரசியல் வட்டாரங்களை அதிர்ச்சிக்குள் தள்ளியதுடன், உலகில் நிரந்தர நண்பர்களோ, நிரந்தர எதிரிகளோ கிடையாது என்ற கோட்பாட்டை இந்தியா கடைப்பிடிப்பதையும் வெளிப்படுத்தியிருக்கிறது.

இலங்கை விவகாரத்தில் இந்தியா எந்த அளவுக்கு அக்கறையுடனும் கவனத்துடனும் இருக்கிறது என்பதற்கு நல்லதோர் உதாரணமாக இருக்கும் ஜே.வி.பி யினருக்கான அழைப்பு நல்லதொரு சமிக்ஞையாக இருந்தாலும், வேறு ஒரு நாடி பிடிப்பாகவும் இருக்கலாம். அதே நேரத்தில் இலங்கை அரசியலில் முழுமையான ஈடுபாட்டுடன்தான் இருக்கிறோம் என்பதனை வெளிப்படையான அறிவிப்பாகவும் இதனைக் கொள்ளலாம்.

ஜே.வி.பி. எனும் மக்கள் விடுதலை முன்னணி ரோஹண விஜயவீரவால் 1960களில் ஆரம்பிக்கப்பட்டவேளை, அவருடைய கடும்போக்கு அரசியலுடன் இந்தியா தொடர்பிலும் விரோதப் போக்கையே கடைப்பிடித்துவந்திருந்தார். அதற்கு அவர் கொடுத்த விளக்கமாக இலங்கை நாட்டின் சுயாதிபத்தியத்துக்கு எதிராகச் செயற்படுபவர்கள் தொடர்பிலான நிலைப்பாடு அமைந்திருந்தது. அவர்கள் தொடர்ந்து கொண்டிருந்த கடும்போக்கு இந்திய விஜயத்துடன் சற்றுத் தளர்ந்திருப்பதாகவே பேசப்படுகிறது. எதிர் நிலைப்பாட்டு அரசியலையே மேற்கொண்டுவருகின்ற ஜே.வி.பியானது கடும்போக்கைக் கடைப்பிடித்திருந்தாலும் ஆட்சி அதிகாரம் என்று வருகின்றவேளை, கடும்போக்கைத் தணித்து இராஜதந்திர ரீதியில், ஓரளவுக்கேனும் மென்போக்கு தேவையானதாக இருக்கிறது என்பதனையே இந்தியாவின் அழைப்பையேற்று சந்திப்புக்களை மேற்கொண்டிருக்கின்றமை காட்டிநிற்கிறது.

பிராந்தியத்தின் கேந்திர முக்கியத்துவமுடையதான இலங்கை, இந்தியாவுக்கு அதன் தேசியப் பாதுகாப்பு, ஒருமைப்பாடு என பல்வேறு விடயங்களிலும் தேவையானதொன்று. எனவே இங்கு ஏற்படவிருக்கின்ற அல்லது ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற அரசியல் மாற்றம் பார்வைக்கு உட்படுவதில் தவறொன்றுமில்லை. அந்தவகையில்தான் ஜே.வி.பியினருக்கான இந்திய அழைப்பும் அமைந்திருக்கிறது. இவ்வருடத்தில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தல் இந்தியா, மேற்குலக சக்திகளாலும் முக்கியத்துவம் மிக்கதாக பார்க்கப்படுகிறது. இது தவிர்க்கமுடியாதது.

இலங்கையில் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் வாக்குகளைப்பெற்று ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ, வாக்களித்த சிங்கள மக்களாலேயே விரட்டியடிக்கப்பட்டமையில் ஜே.வி.பியினரின் பங்கு முக்கியமாக இருந்தது. அதன் பின்னர் உருவாகியிருக்கின்ற அரசியல் மாற்றம் அவர்களது பக்கம் பெரும் மக்கள் அலையொன்றை உருவாக்கியிருக்கிறது. மூன்று ஆசனங்களையே பாராளுமன்றத்தில் கொண்டிருக்கின்ற அக் கட்சிக்கு இது சாதகமானதே.

அண்மைய காலங்களில் மேற்கொள்ளப்படும் கருத்துக் கணிப்புகளின்படி தற்போதைய ஜனாதிபதிக்கும் ஜே.வியினருக்கும் இருக்கின்ற ஆதரவானது சம அளவுகளிலேயே காணப்படுகின்றமை தெரியவருகிறது. அதே நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவு அளவினை விடவும் ஜே.வி.பிக்கு அதிகம் என்பதே இதிலுள்ள பிரதான விடயமாகும். இந்திய ஊடகம் ஒன்று மேற்கொண்ட கருத்துக் கணிப்பில் 50 சதவீதம் ஆதரவு இருப்பதாகக் கணிக்கப்பட்டிருக்கிறது. இதுவே இந்தியா ஜே.வி.பியை இந்தியா அழைத்தமைக்கு ஓர் உந்துதலாகும். இலங்கையில் அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றும் என எதிர்பார்க்கப்படும் ஒரு கட்சியை இந்தியா தங்களுடைய அனுசரிப்புக்குள் இழுத்தக் கொள்வதற்காகவே இந்த அணுகல். இது தவிர வேறொன்றில்லை.

இன்னொருபுறம், 70களின் பிற்பகுதியிலிருந்து தமிழருடைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை ஜே.வி.பி. வலியுறுத்திவந்திருந்தது. இந்த அடிப்படையில் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் இளைஞர்கள் அதில் இணைந்து செயற்பட்டார்கள். பின்னர் 1986இல் ஜே.வி.பியின் தலைவர் ரோஹண விஜேவீர, அதன் மத்திய குழுவுக்காற்றிய மிக நீண்ட உரையில் தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டம் முறியடிக்கப்பட வேண்டிய ஓர் ஏகாதிபத்திய சதி என்றார். அதுவே இன்றுவரை ஜே.வி.பியின் அரசியல் வேதமாகத் திகழ்கிறது. இதில் ஒரு மாற்றமும் ஏற்பட்டுவிடவில்லை. அதனோர் அங்கமே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இணைக்கப்பட்ட வட, கிழக்கினை அவர்கள் பிரித்து வேறாக்கியமையாகும்.

இந்த அடிப்படையில் பார்த்தால் இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினை அமுல்படுத்துவதில் முழு எதிர்ப்பாக இருந்து வருகின்ற இக்கட்சியை எவ்வாறு இந்தியா தம்முடைய பார்வைக்குள் அல்லது கட்டுக்குள்கொண்டுவர முயல்கிறதா என்பது கேள்வி. அப்படியானால், நாங்கள் ஒப்பந்தத்தைச் செய்தோம். அது உங்களது நாட்டின் அரசியலமைப்பில் இருக்கிறது. அதனை நீங்கள் பார்த்துக் கொள்ளவேண்டும் என்ற நிலைப்பாடு காரணமாக இருக்கலாம். இருந்தாலும், இந்தியா தன்னுடைய நலன்களை அலசாமல் இந்த நகர்வை எடுத்திருக்க வாய்ப்பில்லை. இந்த நகர்வு ஒருவேளை, ரணிலுக்கு தேர்தலில் வெற்றி கிட்டாவிட்டால், தற்போதிருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தை விடவும் அதிகப்படியான வாக்குகளைப் பெறப்போகின்ற ஒருவர் அனுரகுமார திசாநாயக்கவாக இருப்பார். அவ்வேளையில், ஏற்படக்கூடிய தர்மசங்கடத்தினைத் தவிர்த்துக்கொள்வதற்கு இந்தியா முன்கூட்டியே இந்த நகர்வினை எடுத்திருக்கிறது என்றும் கொள்ளமுடியும்.

எது எவ்வாறானாலும், தற்போதைய ஜனாதிபதியான ரணில்தான் இந்தச் சந்திப்புக்கான வேலைகளைச் செய்து கொடுத்தார். ஜே.வி.பி. க்கு இந்தியா தம்முடைய ஆதரவினை வழங்குவதற்கு முன்வருகிறது. தமிழர்களின் அரசியல் தீர்வு விடயத்தில் ஜே.வி.பி. யின் ஒத்துழைப்பு முயற்சிக்கப்படுகிறது.

என்றெல்லாம் பேசப்படுகின்ற பல்வேறு விடயங்கள் இதற்குள் இருக்கத்தான் செய்கிறது.

ரணில் இதனை ஏற்பாடு செய்கிறார் என்றால், ஜே.வி.பி தொடர்பில் அவர் வெளியிடும் கருத்துக்கள் அரசியலாக இருக்கும். இல்லாவிட்டாலும், ரணிலுக்கு ஜே.வி. பியின் ஆதரவு கிடைப்பதற்கு ஏதுநிலைகள் ஏற்படுத்தப்பட முயற்சிக்கப்படலாம்.

ஆனாலும், இது இந்தியாவின் தனிப்பட்ட முயற்சியாக இருக்க வாய்ப்புமில்லை. எப்படியிருந்தாலும், ஜே.வி.பி. யினை இந்தியா, அவசர அவசரமாக உள்வாங்க முற்படுவதற்கு வேறும் காரணங்கள் இருக்கலாம். இல்லாமலுமிருக்கலாம். அரசியலில், இராஜதந்திரம் சகஜம்தானே.! என்றவகையில் தமிழர்களுடைய விவகாரத்திலும் தேசிய அரசியலிலும் ஒரு நெகிழ்வுப் போக்கை, அனுசரிப்பு நிலைப்பாட்டை கைக்கொள்ள விளையும் ஜே.வி.பி. எதிர்வரும் காலங்களில் தமிழர்களது அரசியல், இனப்பிரச்சினை தொடர்பில் நல்லெண்ணத்தைக் கைக்கொள்ளும் என்று நம்பிக்கை கொள்வோம்.

## கடிதங்கள்

### கண்டுகொள்ளாத அதிகாரிகள்



இலங்கையின் நகரங்களில் மான்களுக்கென்று பிரபல்யமான நகரம் திருகோணமலை நகரம். இந்நகரத்தில் சாதாரணமாக 500க்கு மேற்பட்ட மான்கள் சுற்றித் திரிவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இந்நிலையில், இரண்டு வாரக் காலமாக ஒரு மானின் கொம்பு வெட்டப்பட்டு வாய் காயப்படுத்தப்பட்டு, உணவு உண்ண முடியாமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்ற நிலைமையைக் காணக்கூடியதாக உள்ளது.

இது சம்பந்தமாக வன ஜீவன்கள் திணைக்கள அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு அழைத்தபோதும் அவர்கள் சிகிச்சை அளிப்பதற்கோ அதனைப் பாதுகாப்பதற்கோ முன்வருவதை இதுவரையும் காணக்கிடைக்கவில்லை. மேலும் இது சம்பந்தமாக பொலிஸ் திணைக்கள அதிகாரியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விலங்குகள் வைத்தியர்களையும் தொடர்பு கொண்டு வினவியபோதும், அவர்கள் தங்களுடைய பாதுகாப்பு பிரச்சினை காரணமாக வந்து பார்க்க முடியாது என்று மறுத்துவிட்டார்.

எனவே, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பிரதேசவாசிகள் மிகவும் கவலையுடன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– ஏ.எம்.கீத்

கொமர்ஷல் வங்கியிடமிருந்து

# ரூ.4 மில்லியன் பணப்பரிசில்கள்



கொமர்ஷல் வங்கியின் வெளி நாடுகளில் இருந்து பணம் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கு சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு மற்றும் ரமழான் பண்டிகைகளை முன்னிட்டு மொத்தம் ரூ.4 மில்லியன் பண வெகுமதிகள் வழங்கப்பட உள்ளன.

கொமர்ஷல் வங்கி கொம்பேங்க் 'ரெமிட்பிளஸ் ரெமிட்டன்ஸ் அதிர்ஷ்டம் - பிற்றரட்ட வாசி'. 'என்ற தலைப்பிலான ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் பெப்ரவரி ஆரம்பித்து ஏப்ரல் 9ஆம் திகதி வரை எட்டு வாரங்களுக்கு மேலாக, 'RemitPlus' பணப் பரிமாற்றச் சேவையின் ஊடாக அனுப்பப்படும் பணத்தினை பெறும் 160 பேரை தெரிவு செய்து, தலா 25,000 ரூபாய் ரொக்கப் பரிசுகளை வழங்கவுள்ளது.

வெற்றியாளர்களின் பெயர்கள் வங்கியின் உத்தியோகபூர்வ சமூக ஊடகபிரிவுகளிலும், RemitPlus செயலியிலும் இன்று (19) முதல் வெளியிடப்படும் என்று வங்கி தெரிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின் ரெமிட்ப்ளஸ் என்பது ஒரு அதிநவீன, குறைந்த கட்டணத்துடன் கூடிய, நிகழ்நேர, இணையத்தள பணப்பரிவர்த்தனை வசதியாகும். இது உலகெங்கிலும் உள்ள பல நாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் அந்நாடுகளில் இருந்து உடனடி பணப் பரிமாற்றங்களைச் செய்ய உதவுகிறது. 130க்கும் மேற்பட்ட நாடுகளில் முகவர்கள் மற்றும் வர்த்தகப்பங்காளர்களின் வலையமைப்பு மூலம் பணம் அனுப்புபவர்கள் இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ள முடியும். கொம்பேங்க் ரெமிட்பிளஸ் ஊடாக பணம் பெறுபவர்களின் கொமர்ஷல் வங்கிக் கணக்குகளில் நாளின் எந்த நேரத்திலும், வருடத்தின் எந்த நாளிலும் உடனடியாக பணம் வரவு வைக்கப்படும்.

கொமர்ஷல் வங்கி வாடிக்கையாளர்கள் தங்களுக்குத் தேவையான பணம் அனுப்புதல் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் சிரமமின்றிப் பெறுவதற்காக வடிவமைக்கப்பட்ட 'கொம்பேங்க் ரெமிட்பிளஸ் App' ஐ கொமர்ஷல் வங்கி ரெமிட் ப்ளஸ் செயலி அறிமுகப்படுத்தியுள்ளது. RemitPlus செயலியை App ஸ்டோர் அல்லது கூகுள் ப்ளே ஸ்டோர் வழியாக எவரும் பதிவிறக்கம் செய்து, இணைவு கட்டணம் அல்லது வருடாந்த கட்டணம் இல்லாமல் பயன்படுத்தலாம்.



பாசிக்குடாவில் உள்நாட்டவர்களுக்கு

# Sun Siyam விசேட சலுகைகள்

உள்நாட்டவர்களுக்கு நாட்டின் கிழக்கு கரையோரத்தின் வனப்பை அனுபவிக்கும் வாய்ப்பை வழங்குவதற்காக குறிப்பிட்ட காலப்பகுதிக்கு Sun Siyam பாசிக்குடா விசேட சலுகைகளை வழங்க முன்வந்துள்ளதாக அறிவித்துள்ளது.

ஆகக்குறைந்தது இரண்டு இரவுகள் தங்கியிருக்கும் விருந்தினர்களுக்கு சகல உணவு மற்றும் பானங்களின் மீது 20% விலைக்கழிவு, ஸ்பா சிகிச்சைகளில் 10% விலைக்கழிவு, அறைகள் வெற்றிடமாக காணப்படும் நிலையில், இலவசமாக அறை மேம்படுத்தல் வசதி மற்றும் முன்கூட்டிய check-ins மற்றும் தாமதமான check-outs போன்ற வசதிகள் வழங்கப்படுகின்றன. இந்த விசேட சலுகை 2024 மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை வழங்கப்படும் என்பதுடன், விருந்தினர்களுக்கு பாசிக்குடாவின் சிறந்த அனுபவத்தை சொகுசாக பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

**விசேட சலுகை 2024 மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை வழங்கப்படுவதுடன், பாசிக்குடாவின் சிறந்த அனுபவத்தை சொகுசாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்**

பாசிக்குடாவின் செழுமையான கரையோரப் பகுதிகள் உலகப் புகழ்பெற்றவையாகத் திகழ்வதுடன், கிழக்கு பிராந்தியத்தின் கலாசார அம்சங்களையும் அனுபவிக்கக்கூடியதாக இருக்கும். இந்த சலுகையைப் பயன்படுத்தி உள்நாட்டவர்களுக்கும், இலங்கையில் வதிவோருக்கும் சொகுசான தங்குமிட வசதிகள், சிறந்த உணவருந்தும் அனுபவங்கள் மற்றும் புத்துணர்வூட்டும் ஸ்பா சிகிச்சைகள் போன்ற வாழ்நாளில் மறக்க முடியாத அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

Sun Siyam பாசிக்குடா, சிறந்த உள்ளக வடிவமைப்புடன், செழுமையான வர்ணத் தெரிவுகளில் அமைந்த 34 இடவசதி கொண்ட ஒன்று முதல் இரண்டு படுக்கை அறைகளைக் கொண்ட பெவிலியன்களைக் கொண்டுள்ளது. விடுமுறையை அனுபவிப்பது என்பதற்கு அப்பால், சிறந்த அனுபவம், பாரம்பரிய கலாசார அனுபவம் மற்றும் மனம் மறவாத அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். பொழுதுபோக்கு அம்சங்களாக infinity pool அல்லது karaoke center இல் பொழுதைச் செலவிட முடிவதுடன், சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வது, யோகா மற்றும் உளவளக்கலை அமர்வுகளில் ஈடுபடவும் முடியும். டெனிஸ் மற்றும் பெட்மின்டன் போன்ற விளையாட்டுகளில் ஈடுபடும் வசதியும் காணப்படுகின்றது.

உள்நாட்டுக் கலை மற்றும் கலாசார அம்சங்களில் இணைந்து, பாசிக்குடாவின் கரையோர அம்சங்களை அனுபவிப்பதுடன், இரம்மியமான இரவு வேளையில், ஜொலித்திடும் நட்சத்திரங்களின் கீழ் அமர்ந்து பிரத்தியேகமான இராப்போசனத்தை அருந்தி மகிழவும் முடியும்.

## SLT-MOBITEL 'Life at 300Mpbs' அறிமுகம்




SLT-MOBITEL இனால் தனது Fibre-to-the-Home (FTTH) பாவனையாளர்களுக்கு 'Life at 300 Mbps' சலுகை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஃபைபர் இணைப்புகளின் வேகத்தை மேம்படுத்தியுள்ளதுடன், அதிவேகமான இணையத்தள பாவனைக்கான அதிகரித்துச் செல்லும் கேள்வியை நிவர்த்தி செய்வதாகவும் அமைந்துள்ளது.

எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ள வேக அதிகரிப்பானது மாதாந்த வாடகை பக்கேஜ்களை கொண்டுள்ள ஏற்கனவே காணப்படும் சகல ஃபைபர் பாவனையாளர்களுக்கும், புதிய வாடிக்கையாளர்களுக்கும் சுயமாகப் பொருத்தமானதாக அமையும். அதிவேக புரோட்பான்ட் வேகங்கள் மற்றும் 150Mbps அப்லோட் வேகத்தை வழங்கும் 'Life at 300Mbps' இன் அனுகூலத்தைப் பெறுவதற்கு, வாடிக்கையாளர்கள் எவ்விதமான மேலதிக கட்டணங்களையும் செலுத்த வேண்டியதில்லை அல்லது தமது பிளான்களை மாற்றிக்கொள்ள வேண்டியதில்லை. பெருமளவு பயன்படுத்தப்படும் நேரங்களிலும், உயர் தரம் வாய்ந்த இணைய இணைப்பை உறுதி செய்வதற்கு புதிய கொள்ளளவு மேம்படுத்தல்களில் SLT-MOBITEL முதலீடுகளை மேற்கொண்டுள்ளது.

புதிய SLT-MOBITEL ஃபைபர் வாடிக்கையாளர்களுக்குப் பெறுமதி வாய்ந்த அன்பளிப்புகள் காத்திருப்பதுடன், அதில் நாளாந்த வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திலும் தாக்கம் செலுத்தக்கூடிய புரட்சிகரமான அதி-வேக இணையமும் அடங்கியுள்ளது.

டிஜிட்டல் உலகம் என்பது டேட்டா அடிப்படையில் இயங்கும் அப்ளிகேஷன்களை செயற்படுத்த, உயர் இணைய வேகத்துக்கான தேவையைக் கொண்டுள்ளது என்பதை SLT-MOBITEL புரிந்து கொண்டுள்ளது.

எதிர்காலத்துக்கு உகந்த இணைப்புத்திறனை பெற்றுக் கொடுத்து, அதனூடாக அவர்களின் மேம்படும் டிஜிட்டல் வாழ்க்கை முறை தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு பங்களிப்பு வழங்க முன்வந்துள்ளது.



5ஆவது வருடத்தை நோக்கி நகரும்

# "நீதிக்கான ஏக்கம்"



ஜே.ஏ.ஜோர்ஜ்

(வெள்ளிக்கிழமை (16.04.2024) தொடர்ச்சி...)

2029ஆம் ஆண்டுடன் முடிவுக்கு வந்த இலங்கையின் இரத்தம் தோய்ந்த உள்நாட்டுப் போருக்குப் பின்னர், ஒரு தசாப்த காலமாக இலங்கை அனுபவித்த அமைதியை, நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட ஏப்ரல் 21 தாக்குதல் உலுக்கியது.

இந்த தாக்குதல் இடம்பெற்று 5ஆவது வருடத்தை அண்மித்துள்ள போதும், இலங்கையின் கத்தோலிக்க திருச்சபை, குறிப்பாக கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, வத்திக்கான் மற்றும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை உட்பட உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் இந்த சம்பவம் தொடர்பாக இலங்கை அதிகாரிகளின் மெதுவான விசாரணைகள் குறித்து கவலையை எழுப்பி வருகின்றார்.

"எங்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. எமக்கு தம்மால் இயன்றவரை நீதி வழங்கியுள்ளதாக அதிகாரத்தில் உள்ளவர்கள் கூறுகின்றனர். ஆனால் அது அவ்வாறு இல்லை. நாம் தொடர்ந்தும் நீதி கோரவில்லையென்றால் இந்த நாட்டில் உள்ள வேறு சில மதத்தினருக்கு எதிரான மீண்டும் இவ்வாறான விடயமொன்று இடம்பெறலாம். இந்த சம்பவத்துக்குப் பயங்கரவாதிகளே காரணம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், அவர்களுக்குப் பின்னால் மறைந்திருந்த கையொன்று இருக்கின்றது. இது ஒரு சதி வேலையாகும்." என்கிறார் கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்டியன் தேவாலயத்தின் திருத்தந்தை மஞ்சுள செபஸ்டியன்.

"விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை எங்களிடம் கொடுத்துள்ளனர். ஆனால் நாங்கள் பெற்ற அறிக்கை தொடர்பான கேள்விகள் எங்களிடம் உள்ளன, அந்த கேள்விகளை நாங்கள் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளோம். மேலும் என்ன நடந்தது என்பதனை புரிந்து கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுடன் நான் வாழ்ந்து வருகிறேன். வெளியில் இருப்பவர்களால் அவர்களின் நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது."

"முழுமையாக ஊனமுற்றவர்கள் உள்ளனர், சிலருக்கு குரல் இல்லை, சிலர் கைகால்களை இழந்துள்ளனர். இன்னும் சிலர் உடம்பில் குண்டுகளின் பாகங்களை தாங்கியவாறு உள்ளனர். பாதிக்கப்பட்ட மக்கள் மற்றவர்களுடன் இணைந்து வாழ முடியும் என்றாலும். அவர்களால் கடந்த கால நினைவுகளில் இருந்து மீள முடியாத நிலை உள்ளது" என்று அந்த மக்களின் நிலையை விளக்குகிறார் திருத்தந்தை மஞ்சுள செபஸ்டியன்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களுடன் பேராயார் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று உள்ளூர் அதிகாரிகளை வலியுறுத்த ஜெனீவாவுக்கு நீதிக்கான கோரிக்கையை எடுத்துச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகத் திருத்தந்தை மஞ்சுள செபஸ்டியன் சுட்டிக்காட்டுகின்றார்.

நீர்கொழும்பு கத்தோலிக்க தேவாலயங்கள் மீதான ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் அந்த நினைவுகளைச் சுமந்துகொண்டு தவிக்கின்றனர்.

நினைவுகளுடன் இன்றும்

குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த 43 பேரின் உடல்களைத் தாங்கிக்கொண்டு அமைதியாக இருக்கின்றது கட்டுவாப்பிட்டிய தேவாலயத்துக்குச் சற்று தூரத்தில் அமைந்துள்ள மயானம். "இங்குதான் அனைவரையும் கொண்டு வந்து அடக்கம் செய்தனர். வரிசையாகக் குழிகளை வெட்டி ஒரே நேரத்தில் அத்தனை பேரையும் ஒன்றாக அடக்கம் செய்த தருணத்தை மீண்டும் ஒரு முறை என்னால் நினைத்து பார்க்கக்கூட முடியாது" என்கிறார் பொன்னுசாமி (பெயர் மாற்றப்பட்டுள்ளது).

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 58 வயதுடைய பொன்னுசாமி சுமார் 40 வருடங்களாக கட்டுவாப்பிட்டிய பகுதியில் வசித்து வருகின்றார். யுத்தத்தால் சிறுவயதிலேயே இங்கு இடம்பெயர நேரிட்டதாகக் கூறும் அவர், 2019 ஏப்ரல் 21ஆம் திகதி காலையில் திடீரென எழும்பிய சத்தத்தைக் கேட்டு, அது குண்டு வெடித்த சத்தம் என்பதை உணர்ந்துகொள்ளச் சிறிய அவகாசமே தனக்குத் தேவைப்பட்டதாக குறிப்பிடுகின்றார். சிறுவயதில்



யாழ்ப்பாணத்தில் வசித்ததால் குண்டு வெடிப்பு சத்தங்கள் தனக்குப் பழக்கப்பட்டிருந்ததாக அவர் சொல்கிறார்.

கடந்த நான்கு வருடங்களில் ஏப்ரல் 19 தாக்குதல் வழக்கு தொடர்பாகக் குறைந்தது 200 சந்தேக நபர்களை இலங்கை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், அவர்களில் டஜன் கணக்கானவர்கள் மீது குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அத்துடன், கடந்த வருடம் ஜனவரி மாதம், இலங்கையின் உயர் நீதிமன்றம், 2019இல் ஜனாதிபதியாக இருந்த மைத்ரிபால சிறிசேன, பயங்கரவாத தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 100 மில்லியன் ரூபாய் இழப்பீடு வழங்க உத்தரவிட்டது.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் போது மக்களின் எழுச்சியால் வெளியேற்றப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 2019இல் ஆட்சிக்கு வந்த போது, தேசியப் பாதுகாப்பை மேம்படுத்துவதாகவும், ஈஸ்டர் தாக்குதல்களுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதாகவும் உறுதியளித்தார்.

அத்துடன், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பதவிக்கு வந்த ஆரம்பத்தில், பாராளுமன்றத்தில் விசாரணைகளைத் துரிதப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று கூறியிருந்தார்.

இலங்கையின் அமைதியை உலுக்கிப்பார்த்த இந்த தாக்குதலில் ஏறக்குறைய 300 பேர் இறந்தனர், பலர் வாழ்நாள் முழுவதும் ஊனமுற்றவர்களாக ஆனார்கள், பல குடும்பங்கள் தங்கள் உணவளிப்பவர்கள் மற்றும் குழந்தைகள் இல்லாமலேயே தனது வாழ்நாளைக் கடத்திக் கொண்டு இருக்கின்றனர்.

இந்த மோசமான தாக்கல் நடந்து ஐந்து வருடங்கள் அண்மித்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க சமூகத்தைச் சேர்ந்தவர்களின் கோரிக்கையும் எதிர்பார்ப்பும் "உண்மை இன்னும் வெளிவரவில்லை, எமக்கு உண்மையும் நீதியும் தேவை" என்பதாகவே உள்ளது.

(செவ்வாய்க்கிழமை தொடரும்...)



தாய்லாந்து



# தாய்லாந்து பிரதமர் விடுதலை

தாய்லாந்து நாட்டின் முன்னாள் பிரதமர் தக்சின் ஷினவத்ரா, ஞாயிற்றுக்கிழமை (18) பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இந்த தகவலை தற்போதைய பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் உறுதிப்படுத்தினார்.

ஷினவத்ரா கடந்த 2001 முதல் 2006 வரை தாய்லாந்து நாட்டின் பிரதமராக இருந்தார். அப்போது சர்ச்சைக்குரிய அரிசி மானிய திட்டத்தின் மூலம் அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியதாக அவர் மீது வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில் தாய்லாந்து முன்னாள் பிரதமருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த சிறைத் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்காக 15 ஆண்டுகள் வெளிநாட்டிலிருந்து கடந்தாண்டு நாடு திரும்பினார் தக்சின். பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவருக்கு 8 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஒகஸ்ட் 2023ஆம் ஆண்டு முதல் அவர் சிறையில் வைக்கப்பட்டார். இந்த நிலையில், அவருக்கு திடீர் உடல்நலக் குறைவு காரணமாக பாங்காங் சிறையிலிருந்து ஆறு மாதங்கள் மருத்துவமனையிலேயே காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவரின் உடல்நலக் குறைபாடு காரணமாக 8 ஆண்டு சிறைத் தண்டனையை மகா வஜிரலோங்கோர்ன் மன்னர் ஓராண்டாக குறைத்தார். இந்த வாரத் தொடக்கத்தில் தக்சினுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

ரஷ்யா

# புற்றுநோய்க்கு எதிராக விரைவில் தடுப்பூசி




உலகெங்கும் மனிதகுலத்தை அச்சுறுத்தும் நோய்களில் ஒன்று புற்று நோய் எனப்படும் "கேன்சர்" (cancer)

உலகம் முழுவதும் அரசு சார்ந்த மற்றும் அரசு சாரா பல அமைப்புகள் புற்றுநோய்க்கு தடுப்பூசி கண்டுபிடிக்கும் முயற்சியில் பல கோடிகளை செலவழித்து தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த வருடம், இங்கிலாந்து அரசு, ஜேர்மனியை அடிப்படையாக கொண்ட, பயோ என்டெக் (BioNTech) எனும் நிறுவனத்துடன், 2030க்குள் 10 ஆயிரம் நோயாளிகள் பயன்படும் வகையில் புற்றுநோய் மருத்துவ ஆராய்ச்சி செய்து கொள்ள ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது.

இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், எதிர்கால தொழில்நுட்பம் குறித்து ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் உரையாற்றினார். அதில் ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள் புற்றுநோய்க்கான மருந்து கண்டுபிடிப்பில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து பேசினார்.

அதில், "எங்கள் ஆராய்ச்சியாளர்கள் புற்றுநோய்க்கான தடுப்பூசியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் வெற்றியை நெருங்கி விட்டார்கள். தனிப்பட்ட வகையில் நோயாளிகளுக்குப் பயன்படும் வகையில் அவை பொதுபயன்பாட்டுக்கு விரைவில் வரும் என நம்புகிறேன்." என தெரிவித்துள்ளார்.

எந்த வகை புற்று நோயைத் தடுக்க இந்த தடுப்பூசி செயல்படும் என்பதையும், எவ்வாறு நோயாளிகளின் உடலில் செயல்படும் எனும் விவரங்களையும் புட்டின் தெரிவிக்கவில்லை.

கொவிட் -19 பெருந்தொற்று காலகட்டத்தில் கொரோனா வைரசுக்கு எதிராக ரஷ்யா "ஸ்புட்னிக்" (Sputnik) எனும் தடுப்பூசியை கண்டுபிடித்து அயல்நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தது குறிப்பிடத்தக்கது.



கிரீஸ்

# தன்பாலின திருமணத்துக்கு அங்கீகாரம்

தன்பாலின திருமணத்தை அங்கீகரிக்கும் சட்டத்திற்கு கிரீஸ் பாராளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

பாராளுமன்றத்தில் உள்ள 300 எம்.பி.க்களில் 176 பேர் இந்த சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். அதேசமயம், கிரீஸ் பிரதமரின் வலதுசாரி ஆளுங்கட்சியைச் சேர்ந்த எம்.பி.க்கள் பலர் இந்த சட்டத்திற்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

இந்த சட்டம் அரசிதழில் வெளியான பின்னர் சட்டமாக மாறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டத்திற்கு ஓரினச்சேர்க்கை ஆதரவாளர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இது ஒரு வரலாற்று சிறப்புமிக்க தருணம் என்றும் இதன் மூலம் எல்.ஜி.பி.டி.(LGBT) உரிமைகள் பாதுகாக்கப்படும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். அதேசமயம், கிரிஸ் நாட்டின் பாரம்பரிய தேவாலய திருச்சபையினர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒடிசா

உடல் உறுப்பு தானம் செய்தால்

# அரசு மரியாதையுடன் இறுதிச்சடங்கு

தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களை மற்ற மாநிலங்களும் ஒவ்வொன்றாக செயல்படுத்தி வருகின்றன.

இந்நிலையில், ஒடிசா அரசு உடல் உறுப்புகளை தானம் செய்பவர்களின் இறுதிச்சடங்குகள் அரசு மரியாதையுடன் நடைபெறும் என அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக், "உறுப்புகளை தானம் செய்யும் நபரின் உடல் மீது மூவர்ண கொடி போர்த்தி 21 குண்டுகள் முழங்க அரசு மரியாதை செலுத்தப்படும்.

மூளைச்சாவு அடைந்தவர்களின் உறுப்புகளை அவர்களது உறவினர்கள் தானம் செய்ய தைரியமாக முடிவெடுத்து பல உயிர்களை காப்பாற்ற வேண்டும். நன்கொடையாளர்களின் தைரியம் மற்றும் தியாகத்தைக் கௌரவிப்பதே மாநில அரசின் நோக்கம். உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் குடும்பத்துக்கு 5 இலட்சம்



**" மூளைச்சாவு அடைந்தவர்களின் உறுப்புகளை அவர்களது உறவினர்கள் தானம் செய்ய தைரியமாக முடிவெடுத்து பல உயிர்களை காப்பாற்ற வேண்டும்**

முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும்" என தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் உடல்கள் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை

நடிகர் விஜய் கட்சியின்

# பெயரில் திடீர் மாற்றம்

நடிகர் விஜய் 'தமிழக வெற்றி கழகம்' என்ற கட்சியை ஆரம்பித்துள்ளார். கட்சி ஆரம்பித்த அறிவிப்பை கடந்த 2ஆம் திகதி விஜய் அதிகாரபூர்வமாக அறிவித்தார். தேர்தல் ஆணையம் அங்கீகாரம் வழங்கியதும் கட்சியின் கொடி, சின்னம் அறிவிக்கப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.

இந் நிலையில், 'தமிழக வெற்றி கழகம்' என்ற விஜய்யின் கட்சி பெயரில், 'க்' விடுபட்டுள்ளதாக தமிழ் ஆர்வலர்கள் பலரும் சுட்டிக் காட்டினர். கட்சிப் பெயரிலேயே தவறு இருப்பதாக பிற கட்சியினரும் சமூக வலைதளங்களில் விமர்சித்து வந்தனர்.

இதனை தொடர்ந்து தனது கட்சியின் பெயரில் 'க்' சேர்த்து 'தமிழக வெற்றிக் கழகம்' என்று மாற்ற நடிகர் விஜய் ஒப்புதல் அளித்தார்.

தொடர்ந்து அக்கட்சியின் அதிகாரபூர்வ சமூக வலைதள பக்கங்களில் 'க்' சேர்த்து 'தமிழக வெற்றிக் கழகம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.






முதலாவது போட்டியில்

# ஆப்கானிஸ்தானை வென்ற இலங்கை

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், தம்புள்ளையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற முதலாவது போட்டியில் இலங்கை வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்

இலங்கை: 160/10 (19 ஓவ.) (துடுப்பாட்டம்: வனிடு ஹசரங்க 67 (32), சதீர சமரவிக்கிரம 25 (24), தனஞ்சய டி சில்வா 24 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: பஸல்ஹக் பரூக்கி 3/25 [4], அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 2/30 [4], கரிம் ஜனட் 1/23 [3])

ஆப்கானிஸ்தான்: 156/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: இப்ராஹிம் ஸட்ரான் ஆ.இ 67 (55), கரிம் ஜனட் 20 (16), குல்படின் நைப் 16 (17), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 13 (06) ஓட்டங்கள். பந்துவீச்சு: மதீஷ பத்திரண 4/24 [4], வனிடு ஹசரங்க 1/20 [4], மகேஷ் தீக்‌ஷன 1/31 [4], அஞ்சலோ மத்தியூஸ் 1/16 [2])

போட்டியின் நாயகன்: மதீஷ பத்திரண

Official Sponsor of the National Cricket Team
Sri Lanka Cricket
Dialog

இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது போட்டியானது இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.




ஐ.எல் இருபதுக்கு-20 தொடர்:

# சம்பியனான யாழ். மைந்தன் வியாஸின் எம்.ஐ எமிரேட்ஸ்

ஐக்கிய அரபு இராச்சியத்தின் இருபதுக்கு-20 தொடரான சர்வதேச லீக் (ஐ.எல்) இருபதுக்கு-20 தொடரில், யாழ்ப்பாணத்தின் விஜயகாந்த் வியாஸ்காந்த் விளையாடிய எம்.ஐ. எமிரேட்ஸ் சம்பியனானது.

டுபாயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற டுபாய் கப்பிட்டல்ஸுடனான இறுதிப் போட்டியில் வென்றே எமிரேட்ஸ் சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய எமிரேட்ஸ், அணித்தலைவர் நிக்கலஸ் பூரானின் ஆட்டமிழக்காத 57 (27), அன்ட்ரே பிளெட்சரின் 53 (37), முஹமட் வஸீமின் 43 (24), குசல் பெரேராவின் 38 (26) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ஸகிர் கான் 4-0-21-1, ஹைதர் அலி 3-0-21-0 என்ற பெறுதியைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 209 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கப்பிட்டல்ஸ், அகீல் ஹொஸைன், முஹமட் றோஹித், வியாஸ்காந்த் (2), வக்கார் சலாம்கெய்ல், ட்ரெண்ட் போல்ட்டிடம் (2) குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்று 45 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் சாம் பில்லிங்ஸ் 40 (29), டொம் பன்டன் 35 (20), ஜேஸன் ஹோல்டர் 24 (16), ஸ்கொட் குக்லஜின் ஆட்டமிழக்காமல் 19 (12) ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக பூரானும், தொடரின் நாயகனாக சிகண்டர் ராசாவும் தெரிவாகினர்.




இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் சிற்றி- செல்சி போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற செல்சியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி சமப்படுத்தியது.

செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை ரஹீம் ஸ்டேர்லிங்க் பெற்றதோடு, சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை றொட்றி பெற்றார்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற வொல்வர்ஹம்ப்டன் வொன்டரேர்ஸுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் தோல்வியடைந்தது. டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை டெஜன் குலுவென்ஸ்கி பெற்றதோடு, வொல்வ்ஸ் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் ஜோவா கோமிஸ் பெற்றிருந்தார்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 57 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளதுடன், 55 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனல் உள்ளதுடன், 53 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் சிற்றி உள்ளது. 49 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அஸ்தன் வில்லாவுள்ளது.

இதில் சிற்றி ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

# மஸ்கெலியாவில் கரப்பந்தாட்டப் போட்டி

செ.தி.பெருமாள்

'நீதி' செயற்பாட்டுடன் இணைந்து ஆரோக்கியமான இளைஞர் சமூகத்தை விளையாட்டுக்கு வழிநடத்தும் நோக்கில் மஸ்கெலியா, நல்லத்தண்ணி, மற்றும் நோர்வூட் பொலிஸ் எல்லைக்குட்பட்ட இளைஞர்கள் பங்குபற்றிய கரப்பந்தாட்டப் போட்டி மஸ்கெலியா பொது விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (18) நடைபெற்றது.

மஸ்கெலியா, பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்ட இப் போட்டியானது ஹட்டன் பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் நிபுன தெஹிகம தலைமையில் இடம்பெற்ற இந்த போட்டியில், 28 அணிகள் டியிட்டன.









விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 19, பெப்ரவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.